# என்றும் நினைவில் நிறுத்த வேண்டிய சில கிறிஸ்தவ வாழ்வியல் கோட்பாடுகள்–ஓர் அலசல்

**Y. Shanthi Pon Indra**
*Associate Professor of Zoology, Popes College*
*Sawyer Puram, Tuticorin*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6479

## மதம் என்பது ஒரு சமூக நிகழ்வு

அது ஒரு சமூக நிறுவனம் என்பதிலிருந்து மதம் குறித்த சமூகவியல் துவங்குகிறது எனலாம். இது ஒரு சாதாரண வாக்கியம் போல் தோன்றலாம். மதத்தின் எல்லா கூறுகளுமே சமூக வாழ்வில் உருவானவை. அவற்றை சமூகரீதியாக விளக்க முடியும் என்பது இதன் பொருள். தன் மைந்தன் இயேசுவின் மூலம் இறைவன் தனது செய்தியை உலகுக்குத் தந்தார் என்பதிலிருந்து கிறித்தவம் தொடங்கும் நபிகள் நாயகம் மூலம் இறைச் செய்தி இறக்கப்பட்டதாக இஸ்லாம் கூறும். தொடர்ந்து இறைவன், இறைமைந்தன், அவதாரங்கள், இறைத்தூதுவர் ஆகியோர் நிகழ்த்திய அற்புதங்களையும் அதிசயங்களையும் மதங்கள் தமக்கு ஆதாரமாகக் கொள்ளுகின்றன. இதுபோன்ற சமூகம் கடந்த வரலாறு கடந்த காலம், கடந்த நிகழ்வுகளைச் சமூகவியல் ஏற்காது. மதம் என்பது ஒரு சமூக நிகழ்வு எனும்போது மதங்களின் தோற்றத்தை, வரலாற்றைச் சமூகவியல் நிகழ்வுரீதியாகவே விளக்கும். சமூக வாழ்வில் நிகழ்ந்த ஒரு நெருக்கடியோ, வரலாற்றில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனையோ ஒரு மதத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்ததாக அது கூறும். மதம் குறித்த மார்க்சிய விமர்சனங்கள் பலதரபட்டவை என்கிறார் மிகப்பெரிய நாத்திகரான கார்ல் மார்கஸ்.

மிகப் பெரும் தத்துவவாதிகளெல்லாம் சறுக்கி விழும் இடமாக மதம் இருந்து வந்திருக்கிறது. மதத்தையும் கருத்துமுதல்வாதத் தத்துவங்களையும் ஒருசேர விமர்சனம் செய்ய வேண்டியது அவசியம் என்று மார்க்ஸ் கருதினார். இந்திய சுழல்களில் மதம் பற்றிய கருத்துக்களை பட்டியலிடும் போது “மதங்கள் உலகைக் குறித்து தலைகீழான விளக்கங்களைத் தருகின்றன. மனிதன் தான் மதங்களைப் படைத்தான்” ஆனால் இறைவனே மனிதனைப் படைத்ததாக மதங்கள் கூறும். உலக வாழ்க்கை அனுபவங்களின் அீதப் புனைவுகளே மதப் புராணங்கள் ஆனால் உலகத்தையே புனைந்தது இறைவன் தான் என்று மதங்கள் கூறும். மனிதன் தனது உருவத்திலேயே, மனிதப் பண்புகளோடு தான் இறைவனை உருவாக்கியிருக்கிறான் “ஆனால் இறைவன் அவரது சாயலிலேயே மனிதரைப் படைத்ததாக மதங்கள் கூறும். மதம் என்பது உலகம் குறித்த தலைகீழ் விளக்கம்” என்கிறார் ந.முத்துமோகன்.

இறைவன் உலகைக் கடந்தவன் என்று ஒரு சாரார் கூறிக் கொண்டிருக்க - அப்படி இல்லை, இறைவன் உலகின் உட்பொருள் என்று இன்னொரு சாரார் வாதித்தனர்.

இயற்கையை வெறும் சடப்பொருள் என்று ஒரு தரப்பினர் வலியுறுத்த - இன்னொரு தரப்பினர் இயற்கையே இறைவன், இறைவனின் புரண அழகும் அற்புதமும் இயற்கையில்தான் வெளிப்படுகின்றன என்றும் கூறி வந்தனர்.

நிறுவனமாகவும் சடங்குகளாகவும் இறுகிப்போய்விட்ட கிறித்தவ மத்திற்குள் அவற்றை ஏற்காத மறைஞானியர் (Mystics) பலர் தோன்றினர். இறை அன்பு அதனைச் சகல உயிர்களையும் நோக்கிப் பரப்புவது என்ற மையத்தை மட்டும் மறைஞானிகள் ஏற்றுக்கொண்டனர்.

இறைவன் உலகைப் படைத்தவன் அதனைத் தொடர்ந்து நிர்வகித்து வருகிறார் என்ற கருத்தை ஏற்காத மறைஞானிகள் உண்டு. இறைவன் உலகைப் படைத் திருக்கலாம் ஆனால் அதன் தொடர்ந்த இயக்கத்திலும் செயல்பாடுகளிலும் இறைவன் தலையிடுவதில்லை என்ற கருத்தை சிலர் கூறிவந்தார்கள். இதன் மூலம் படைக்கப்பட்ட உலகத்தில் மனிதன் முழுக்க சுதந்திரமானவன் என்ற கருத்தை அவர்களால் வலியுறுத்தப்பட்டது. உலகம் படைக்கப்பட்ட பிறகு அது அதன் சொந்த இயக்க விதிகளால் (விஞ்ஞான விதிகளால்)நிர்வகிக்கப்படுறது என்றும் அவர்கள் கூறினார்கள்.

மத்திய கால கிறித்துவ மதத்தின் கடைசிப் பிரதிநிதிகளில் ஒருவரான குசான் நிக்கலாய் இறைவன் எதிர்மறைளின் ஒருமை என்று வரையறுத்தார். இக்கருத்தின் இயக்கவியல் பண்பைக் காரல் மார்க்ஸ் பாராட்டினார். ஜெர்மானிய கிறித்தவ மறைஞானியான பொகிமே (போமே)யின் இயக்கவியல் கருத்துக்களையும் மார்க்ஸ் மதித்தார். 16-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவத்திலிருந்து புராட்டஸ்டண்டு (சீர்திருத்த கிறித்தவர்) மதம் தோன்றியதை நில உடைமையிலிருந்து முதலாளிய சமூகம் தோன்றுவதன் முன்னறிவிப்பு என்று எங்கல்ஸ் சுட்டிக்காட்டினார். வர்க்கங்கள் பற்றிய மார்க்சியக் கோட்பாட்டை வேபர் ஏற்றுக் கொண்டார். இருப்பினும், வரலாற்றின் முற்காலங்களில் சமூக அந்தஸ்து தீர்மானகரமான பாத்திரம் வகித்தது என்று அவர் குறிப்பிடுவார். மரபுரீதியான சமூகங்களில் புனிதம் பற்றிய நம்பிக்கைகளோடும் புனித அதிகாரத்தோடும் தொடர்பு கொண்டு சமூக அந்தஸ்து உருவாகிறது. சீர்திருத்தக் கிறிஸ்தவம் கடவுளின் மகிமையால் உலகம் படைக்கப்பட்டது என்று கொள்ளுகிறது. கடவுளின் நோக்கங்களை நாம் முழுவதும் அறிந்து கொள்ளமுடியாது இருப்பினும், உலகம் படைக்கப்பட்டதில் இறைநோக்கம் உள்ளடங்கி இருக்கிறது. உலகப் படைப்பில் ஒவ்வொரு மனிதனுக்கம் இறைவனால் குறிப்பிட்ட ஓர் இடம் வழங்கப்பட்டுள்ளது. (Calling). உலக வாழ்விற்குள்ளேயே அவரவருக்குத் தரப்பட்டுள்ள இடத்தில் ஒருவித சந்நியாச வைராக்கியத்துடன் மனிதன் வாழவேண்டும். உலகைக் கடந்து வெளியே செல்லுவதல்ல. உலக வாழ்விலேயே இறை உணர்வுடன் இறை அமைப்பை மனமுவந்து ஏற்று நடத்தையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ந.முத்துமோகன் தனது நூலில் மதம் குறித்த சமூகவியலின் இரண்டு போக்குகளை பற்றி கூறும் இடத்தில் பதிவிடுகிறார்.

இப்படியாக மனிதர்கள் பலவிதம்: அவர்கள் தம் பார்வையும் பலவிதம். கிறிஸ்தவத்தை விமர்சிக்கும் விமர்சகர்கள் தத்துவ ஞானிகள் ஏராளம் ஏராளம். எது எப்படியாயினும் சுவிசேஷகத்தில் சொல்லப்பட்ட இயேசுவான வரை யோவா 3:16ல் சொல்லப்பட்டதின் படியாக ருசித்த ஓர் உயிரி தன் சக உயிரியின் மேல் கொண்ட அன்பினால், அதுவும் உன்னை நேசிப்பது போல் மற்றவனை நேசி என்ற இயேசு பெருமானின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என ஓர் நபர்

தன்னுடைய "பிறன்" எப்படியாக இருக்க வேண்டும், எவைகளை மறந்து விட கூடாது என்ற எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்து பவனாக இக்கட்டுரை மிளிர்கிறது. அதுவும் மாறுகின்ற அவசர உலகில் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படுகின்ற சூழலில் என்றும் மனதில் இருத்திக் கொள்ளவும் செய்யவும் வேண்டிய நிதசர்ண உண்மைகளான இயேசு கிறிஸ்துவின் வாழ்வியல் நடைமுறைகளில் ஒரு சிலவற்றை பட்டியலிடுகிறது இக்கட்டுரை.

### யார் நீங்கள்

"To know thyself is the beginning of wisdom" என்கிறார் தத்துவஞானி சாக்ரடீஸ் நீங்கள் யார் என்பதை அறிவது மிக முக்கியம். இறைவனின் சுவாசம் ஊதப்பட்டதால் ஜீவாத்துவாமான (ஆதி 2:7) முதல் மனிதன் ஆதாமை நிலத்தை பண்படுத்த, காக்க ஏதேனில் வைத்து ஏவாளை அவன் விலா எலும்பில் உருவாக்கி ஆதி, 1:28 - 30 வசனங்களின்படி தேவசாயலாக சிருஷ்டித்து, அதுவும் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து பலுகப் பெருகி புமியை நிரப்பி, புமியைக் கீழ்ப்படுத்தி எல்லா மிருகங்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று ஆசீர்வதித்தார். அவர்கள் கீழ்ப்படியாத போது இரட்சிப்பின் திட்டத்தை முன்மொழிந்து, தமது தீர்க் கதரிசிகளின் அந்தந்தக் காலக் கட்டத்தில் முன்னறிவித்து தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் பெத்லகேமில் பாலகனாய் அவதரித்து தாம் விரும்புகின்ற பிதா நிறைவேற்ற வேண்டும் என்ற காரியங்களை தம் சீஷாகளுக்கு படிப்பித்து அவைகளையே பின்வரும் வேத வாக்கியங்களின்படியே தமது மாசில்லாத ரத்தம் சிந்துதலின் மூலமாக நித்திய பலியாக சிலுவையில் மரித்து, உயிர்த்து, பரமேறி, சுவிசேஷத்தையே பின்வரும் எல்லா ஜாதிகளுக்கும் அறிவிக்க வைத்து அதை விசுவாசிக்கின்ற யாவருக்கும் நித்திய ஆக்கினைத் தீர்ப்பினின்று விடுவிக்கப்பட செய்ய வேண்டிய காரியங்களை தமது பரிசுத்த அப்போஸ்தலர்கள் மூலம் நிருபங்களில் உபதேசங்களாக சொல்லப்பட்ட ஆதாரங்களின் படி இன்றையக் காலக் கட்டத்தில் இன்றைய அவரது சரீரத்தின் உறுப்புகளாக அதாவது அவரது சரீரத்தின் எந்த அவயமாக அழைக்கப்பட்டிருக்கிறோமோ அந்த அவயத்திற்குரிய வேலையைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள் நீங்கள் (ஆதாரம் எபேசியர் 4:12 - 16) இரத்தம் சிந்தி சம்பாதித்த அவரது சரீரமாகிய சபையின் அங்கங்கள் மட்டுமல்ல அதிக கனிகளைக் கொடுப்பதற்காக இயேசு அதிக கனிகளைக் கொடுப்பதற்காக இயேசுவாகிய திராட்சச் செடியில் கொடிகளாக இணைக்கப்பட்டவர்கள் நீங்கள் (யோவான் 15:2). மட்டுமல்ல, நல்ல கனி கொடுக்கும் நல்ல மரம் தான் நீங்கள் (யோவான் 6:43). ஓர் விசேஷத்த நோக்கத்திற்காக தாயின் கருவில் உண்டாகும் முன்பல்ல உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் தான் நீங்கள் (எரேமியா 1:5). மேலும், உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததி: ராஜரீகமான ஆசாரியக் கூட்டம் பரிசுத்த ஜாதி அவருக்கு சொந்தமான ஜனங்கள் தான் நீங்கள் (1 பேதுரு 2:9). இந்த ஜனத்தை எனக்கென்று தெரிந்துக்கொண்டேன். என் துதியை சொல்லி வருவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் நம்மேல் நம்பிக்கை வைத் திருக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நீங்கள் (ஏசாயா 43:21), மட்டுமல்ல கர்த்தராகிய தம்மை கூப்பிடும்போதெல்லாம் அவரை சமீபமாய் பெற்றவர்கள் தான் நீங்கள், கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகத் கொண்ட ஜாதியும் அவர் தமக்காகச் சொந்தமாக தெரிந்து கொண்ட ஜனமும் நீங்கள் தான் (சங் : 33:12) என்பதினை முதலாவது மறவாதீர். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை

போராடவும் நித்திய ஜீவனை பற்றி கொள்ளவும் அழைக்கப்பட்டவர்கள் நீங்கள் (1 தீமோத்தேயு:6:11,12). உலகிற்கு உப்பாய், ஒளியாய் இருக்க வேண்டியவர்கள் (மத்தேயு:5:14,17) என்பதினையும் மறவாதீர்கள். இதற்காக பின்வருமாறு மாறவும் மறவாதீர்கள்.

### தேவபிரியராய் மாறுங்கள்

பக்தியின் பிரதிபலிப்பாகிய பக்திவினயமாய் ஆண்டவரை ஆராதிப்பது காணிக்கை கொடுப்பது ஆலய சம்பந்தமான விஷயங்களில் பக்தி வைராக்கியம் காட்டுதல் நவஉ போன்றவற்றை செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் கிறிஸ்துவின் உறவிற்குள் வருவது தான் கன்மலையாகிய அவருக்குள் சேர்வது அவருடைய செட்டைகளின் நிழலிலே அடைக்கலமாக வருவதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை என்பதினை உணர்ந்து ஓர் தரமான வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழுங்கள் (ரோமர் 12: 4 - 18) ஒரே நிலையில் நிற்காதீர்கள், முன்னேறிச் செல்லுங்கள், இலக்கை நோக்கி ஆசையாய் தொடருங்கள், மனிதரைப் பிரியப்படுத்து கிறவர்களாய் இராமல் தற்பிரியராய் இராமல் (11 தீமோ 3:20) பணப்பிரியராய் இராமல் சுகபோகபிரராய் இராமல் தேவபிரியராய் உங்களைக் குறித்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுங்கள் தீமா 3:4) (மத்தேயு 7 : 21).

### வேத வசனத்தின்படி உங்களை காத்துக் கொள்ளுங்கள்

வேதவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையுள்ளவர்களாய் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி நடக்கிறவர்களாய் இருங்கள். ஆம் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்குகம் சீர்திருத்தலுக்கும் நீதியைப் பிறப்பிக் குதலுக்கும் பிரயோஜனமான வேதவசனங்களை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி (11 தீமோ 3:17)"எந்த நற்கிரியையும் செய்ய உங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ளுங்கள்". (11 தீமோ 3:16)

ஆண்டவருடைய மலைப்பிரங்கம் மத்தேயு 5:6:7 அதிகாரங்கள் மற்றும் லூக்கா 6:17-49)ல் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உபதேசித்த பிரமாணங்கள் கற்றுக் கொள்வதற்கு விழையுங்கள். தாவீதைப் போல் வேதவசனங்களை தியானியுங்கள் மனதில் அதை யோசியுங்கள். வேத வசனத்தினால் பெலனடையுங்கள் அவ்வசனங்களால் வரும் ஆறுதலில் நிறைந்திருங்கள்.

### தாலந்துகளை ஆண்டவருக்காய் செலவு (Invest) பண்ணுங்கள்

கர்த்தாதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் தாலந்து உவமைதனை மறவாதீர்கள். பவுலைப் போல் செலவ பண்ணவும் செலவு பண்ணப்படவும் தயாராய் இருங்கள் சபை வளர்வதற்கு முட்டுக்கட்டையாய் உங்கள் பங்கை நிறைவேற்றாது இருக்காதீர்கள். கர்த்தர் தரும் வாய்ப்புகளுக்கு காத்திருங்கள். இந்த வாய்ப்பு தருணம் கிடைக்கவில்லை என்று வருத்தப்படாதீர்கள். மேலான சிலாக்கியம் வாய்ப்புகள் உங்களைத்தேடி வரும். நாம் ஒருமித்து கர்த்தரை உயர்த்து வோமாக, தேவராஜ்ஜியம் கட்டப்பட கர்த்தருக்காய் உழைத்திருங்கள்.

### உங்கள் ஆத்ம இரட்சிப்பை காத்துக் கொள்ளுங்கள்

உங்கள் ஆத்தும இரட்சிப்பை காத்துக் கொள்ளுங்கள், விலையேறப்பெற்ற இரட்சிப்பை அசமட்டைப் பண்ணாது இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவரான தேவன் மிகுந்த அன்பினாலே நம்மில் அன்புகூர்ந்து அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே உயிர்ப்பித்து கிருபையினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் நீங்கள் (எபே 2:3) நியாயப்படி கிறிஸ்துவைச்

சேராமல் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கை இல்லாதவர்களுமாய் தேவனற்றவர்களுமாய் முன்னே இருந்தாலும் இப்பொழுது அதாவது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என விசுவாசிக்கின்ற பொழுது இயேசுவுக்குள் கிறிஸ்துவின் ரத்தினாலே சமீபமானவர்கள் நீங்கள் (எபே 2:12-13) கடைசியாக என் சகோதர சகோதரிகளே உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்ற வேதாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள் யாத் 2:8 மேலும் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள் ii கொரி 13:5 சந்தோஷமாய் இருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலையடையுங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணமாகிய தேவன் உங்களோடே கூட இருப்பார். II பொ 13:11 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக, ஆமென். II. கொரி 13:14.

## நற்கிரியைகளைச் செய்வதற்கு உங்களைத்தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

ஆண்டவரால் உங்களுக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்டிருந்த நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் நீங்கள் (எபே 2:10), எபிரேயர் 11ம் அதிகாரத்தில் வரும் விசுவாச வீரர்கள் தொடர்ந்து காணாதவைகளை நம்பும் விசுவாசவீரர்களான நீங்கள் செயல்பாட்டை அதிகம் விரும்புங்கள் (யாக் 2:17-22) ஆபிரகாம் ராகாப் போன்ற கிரியைகளினால் நீதியுள்ளவர்களாக எண்ணப்படுங்கள், யாக்கோபு 2:21-25 நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருங்கள், கனியற்றவர்களாயிராதப்படி 5 குறைவுகளை நீக்குவதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்ய பழகுவீர்களாக தீத்து 3:8-14. கேள்விகளை அடுக்கம் அறிவாளிகளை விட துணிந்து செயலில் இறங்குவோருடனேயே சகவாசம் கொள்ளுங்கள் (ஆதி 12:1, எபி 11:8) ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறி வரப் பண்ணின சமாதானத்தின் தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தனக்கு முன்பாக பிரியமானதை உங்களில் நடப்பித்து நீங்கள் தம்முடைய (தேவடைய) சித்தத்தின் படியே செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களுக்குவாராக அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக ஆமென், எபி 13:21.

இயேசு சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பு வீணாய் போய் விட கூடாது. 1கொரி 1:17 சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிற உங்களுக்கு தேவபெலனாய் இருக்க வேண்டும். 1கொரி 1:18 நீங்கள் விழிப்புள்ளவர்களாயிருப்பதினால் உங்கள் பிள்ளைகள் 1000 மடங்கு ஆண்டவரை நேசிக்க கற்றுக்கொள்ள நீங்கள் மாதிரியாய்/ ஏதுவாய் இருங்கள். ஆத்துமா ஈடேற விசுவாசிகளாய் இருப்போம். உங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். "ஆபிரகாமைப் போல் விசுவாசத்தில் வல்லவராகுங்கள். (ரோமர் 4:21) உங்கள் கிரியைகளினாலே விசுவாசம் புரணப்படவும் உங்கள் காரியங்கள் யாவும் அன்போடு செய்யப்படக்கடவது. உங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுங்கள். நீதியையும் செய்யுங்கள்.

## தேவனோடு நடவுங்கள் சுவிசேஷத்தைப் பரப்புங்கள்

இயேசு கிறிஸ்து காட்டிய மாதிரியின்படியே ஸ்திரியினிடத்தில் பிறந்தவர்களில் பெரியவரான யோவான் ஸ்நானகனைப் போல் ஆவியில் பலங்கொண்டு தேவனோடு

நடந்து உள்ளான மனிதனில் பெலப்பட்டு என் சிநேகிதன் என்று ஆண்டவர் சாட்சி பகிரும் அளவிற்கு தேவனோடு பழக விளையுங்கள். நீங்கள் கைவிடப்பட்ட நிலை, உடைக்கப்பட்ட நிலைதான் நீங்கள் ஆவியில் ஏற்றுக்கொள்ள சரியான நேரம் என்பதினை மனதில் கொண்டு அழைப்பைக் காத்துக் கொள்ளுங்கள். அப். 20:24.

வசனம் சொல்வதுபோல் ஆகிலும் அவைகள் ஒன்றையும் குறித்து கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன், என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்று பவுலோடு சேர்ந்து சொல்லுங்கள்.

பவுலைப் போன்று வெகுமனத் தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், என் சொந்த ஜனங்களுடைய (யுதருடைய) தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் கர்த்தரைச் சேவித்தேன் என்று தைரியமான விசுவாச அறிக்கையினை அறிக்கைப்பண்ண மறவாதீர்கள், (அப்.19:20) யோசுவா அறிக்கையிட்டதுபோல் நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று ஆர்ப்பரித்திருங்கள். நல்ல போராட்டத்தைப் போராடுங்கள், வாழ்க்கைப்பயண ஓட்டத்தை வெற்றியாய் முடித்திடுங்கள், உங்களுடைய ஆயத்தம் பண்ணப்பட்ட ஜீவகிரீடத்தை பெற்றிடுங்கள். உங்கள் ஆத்துமாக்களை காத்திடுங்கள், நித்திய ஜீவன் ஆத்துமா வாழ்வதுபோன்று நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்க வாழ்த்துகிறேன், தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர் நம்மூலம் மகிமைப்படுவாராக, அவரது மகிமையை சுமந்து செல்வோமாக. “இறைவனது படைப்பில் ஒரு கொடூரமான தனிமை மனிதனுக்குத் தரப்பட்டுள்ளது என்று கிறிஸ்தவம் கூறுவது இப்போதும் உண்மையே. இந்தத் தனிமையை மனிதன் அனுபவித்தே ஆக வேண்டும். கூட்டு வழிபாடுகளாலோ, மதகுருக்களாலோ இந்தத் தனிமையை இல்லாமலாக்க முடியாது. இந்தத் தனிமையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், அதனை எதிர்கொள்ளாமல் எந்தவித மீட்பு மார்க்கமும் உருவாக்கப்பட முடியாது. ஒவ்வொரு மனிதரும் அவரவருக்குத் தரப்பட்டுள்ள பணியை ஏற்று உள்ளத்தூய்மையுடன் அதனைத் தீவிரமாகச் செய்து முடிப்பதே மனிதத் தனிமையை எதிர்கொள்ளுவதற்கான ஒரே வழியாகும். தனிமை மனிதனை அறவியல் கேள்விகளுக்கு ஆட்படுத்துகிறது. பாவம் குறித்த குற்ற உணர்ச்சி மட்டும் இருந்தால் போதாது' தனிமனிதக் கட்டுப்பாடு குறித்த உணர்வு அதைவிட முக்கியமானதுசுஎன்று ந.முத்துமோகன் சமூகவியல் நோக்கில் மதம் என்ற தனது நூலில் பதிவிடுகிறார்.

“பரலோகத்தை அடைய ஓர் விசுவாசி தவறினால் நரகத்தில் அவன் சேர்வதை தடுக்க முடியாது.” தண்ணீரைப் போல கரைந்துபோகும் இருதயம் உள்ள ஓர் பாத்திரம் ஆண்டவரால் அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு இன்று உடைக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட அக்கினியினால் திடப்படுத்தப்பட்ட, உருவாக்கப்பட்ட கர்த்தர் பயன்படுத்தும் பாத்திரமாய் இருந்து பதிவிட்ட கட்டுரையின் கருப்பொருளானது வரும் தலைமுறையினர்கள் வேத வசனத்தின் அடிப்படையில் வாழ்கிறார்களா / வாழ்க்கை அமைத்துக் கொண்டிருக்கிறார்களா என்று உரசி பார்க்கும் ஓர் உரசு கல்லாய் இருக்குமென உறுதியாய் விசுவாசிக்கிறேன்/ நம்புகிறேன்.

“நானே வழி சத்தியம். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் நான் அன்பாய் இருப்பது போன்று அன்புடையவர்களாய் இருங்கள். நான் பரிசுத்தர், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.

நான் நீதி செய்கிறவர், நீதி செய்யுங்கள் என்றும் நான் உங்கள் அனுப்புகிறேன். என்னில் குற்றமுன்டுறென்று யார் என்னை குற்றபடுத்த கூடும்" என்று சொன்னவராகிய கிறிஸ்து இயேசுவானவர் உணர்த்துகின்ற வாழ்வியல் நடைமுறைகளை பின்பற்றி சமாதானத்துடன் சந்தோஷத்துடன் உங்கள் ஆத்துமாக வாழ்கிறது போல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாக இருப்பீர்களாக, ஆண்டவரையும் அறிந்து கொள்வீர்களாக தத்துவ ஞானிகள் போன்று பேச்சில் அல்ல செயலில் காட்டும் செயல் வீரராய் மாறுவீர்களாக.